**OS.No.98/2021 P.W.1-சீனிவாசன் 12.01.2026**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

பிரதிவாதி என்னிடம் 27.03.2007ல் வழக்கு சொத்தை அடமானம் வைத்து ரூபாய் 2 லட்சம் கடன் வாங்கினார் என்றால் சரிதான். அந்த அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் என்றால் சரிதான். 27.03.2007 தேதிப்படி பிரதிவாதி தான் எனக்கு ரூபாய் 2 லட்சம் திருப்பி தரக்கூடிய நிலையில் உள்ளார் என்றால் சரிதான். 06.02.2008 தேதியன்று நான், பிரதிவாதியுடன் கிரய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாக சொல்லியுள்ளேன். 27.03.2007 முதல் 06.02.2008 வரை பிரதிவாதி அடமான கடன் முன்னிலைக்கு வட்டி ஏதாவது செலுத்தியுள்ளாரா என்றால் செலுத்தவில்லை. நான் கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திய பிறகு ரூபாய் 10 லட்சம் முன்பணமாக கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு உள்ளபோது பிரதிவாதி 27.03.2007ல் என்னிடம் வட்டிக்கு வாங்கிய ரூபாய் 2 லட்சத்தை அந்த முன்பணத்தில் கழித்து விட்டாரா அல்லது அதனை அப்படியே வைத்திருந்தாரா என்றால் அப்படியே வைத்திருந்தார். நான் உண்மையில் கிரய ஒப்பந்த பத்திரம் முன்னிலைக்கு முன்பணமாக ரூபாய் 10 லட்சம் கொடுத்திருந்தால் பிரதிவாதி என்னிடம் வட்டிக்கு வாங்கிய கடனை அந்த முன்பணத்தில் கழித்திருப்பாரே தவிர கடனை நிலுவையில் வைத்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. 06.02.2008 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரம் நான் போலியாக உருவாக்கிய கிரய ஒப்பந்த பத்திரம் என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரம் உண்மையானதாக இருந்திருந்தால் நான் தான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்திருப்பேன் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு 04.01.2019ல் ஒரு வழக்கறிஞா் அறிவிப்பு அனுப்பினாா் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)